# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 206/ந/2019**

**நாள் : 10/02/2020**

**திரு கே. முருகேசன்,**
**பேர்ணாம்பட்டு.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையாளர்,**
**பேர்ணாம்பட்டு நகராட்சி,**
**பேர்ணாம்பட்டு.** – **எதிர் மனுதாரர்**

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு, 4–வது சவுக்ரோடு, பூங்காவீதி, 65/8 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு கே. முருகேசன் அவர்களின் மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 206/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :–

## ஆணை

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு, 4–வது சவுக்ரோடு, பூங்காவீதி, 65/8 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு கே. முருகேசன் என்பவர் தான் பேர்ணாம்பட்டு நகராட்சியில் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றி 31.12.2016 அன்று பணி ஓய்வு பெற்றதகாவும், தனக்கு வழங்கப்பட வேண்டிய கீழ்க்காணும் இனங்களுக்கான தொகையினை வழங்கிட ஆணையிடக்கோரி இம் முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

(1) 7–வது ஊதியக்குழுவின் பரிந்துரையின் படி ஊதியம் நிர்ணயம் செய்து நிலுவைத் தொகையினை வழங்கவும் ;

(2) சிறப்பு சேமநல நிதி மற்றும் அத்தொகைக்கான வட்டித் தொகை வழங்கவும் ;

(3) 5–வது ஊதியக்குழு நிலுவைத் தொகை மற்றும் அதற்கான வட்டித் தொகை வழங்கவும்.

2. முறையீட்டு மனுதாரரின் மேற்குறிப்பிடப்பட்ட முறையீடுகள் குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. 7–வது ஊதியக்குழு பரிந்துரையின் அடிப்படையில் ஊதியம் நிர்ணயம் செய்து அது சம்பந்தப்பட்ட கருத்துரு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்ககத்திற்கு 04.01.2020 அன்று அனுப்பப்பட்டுள்ளதென்று நகராட்சி ஆணையர்

தெரிவித்துள்ளார். மேலும், 5–வது ஊதியக்குழு நிலுவைத் தொகை ரூ.2,166/– மற்றும் அத்தொகைக்கான வட்டி ரூ. 29,521/– கணக்கிடப்பட்டு செயல்முறை ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றும் அத்தொகை ஒரு வார காலத்தில் வழங்கப்பட்டுவிடும் என்று தனது 06.01.2020 நாளிட்ட கடிதத்தில் ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், சிறப்பு சேமநலநிதி மற்றும் அதற்குண்டான வட்டியினை வழங்கக்கோரி மனுதாரர் 04.01.2020 நாளிட்ட மனுவினை நகராட்சியில் தாக்கல் செய்துள்ளார் என்றும் அத்தொகையினை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய கருத்துரு ஆம்பூர், சார் நிலை கருவூலகத்திற்கு உடன் அனுப்பப்படும் என்றும் ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. மனுதாரரின் கோரிக்கைகள் குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மற்றும் ஆம்பூர் சார்நிலை கருவூலத்திற்கும் கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன. நிலுவைத் தொகை வழங்குவது சம்பந்தமாக மேற்குறிப்பிட்ட அலுவலகங்களின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் நிலுவைத் தொகையினை காலதாமதமின்றி முறையிட்டு மனுதாரருக்கு வழங்க நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 10–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 13.2.20

13-2-2020

13/2/2020

பெறுநர்

1. திரு கே. முருகேசன்,
துப்புரவு பணியாளர் (ஓய்வு),
65/8, பூங்கா வீதி,
சவுக் ரோடு –4,
பேர்ணாம்பட்டு அஞ்சல்,
வேலூர் மாவட்டம்

2. நகராட்சி ஆணையாளர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி,
பேர்ணாம்பட்டு

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி